மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 29 ஒக் - 11 நவ 2006, குரல் 02

Voice of London Tamils

லண்டன் குரல்

உள்ளே .....

பக்.2 தமிழ் பத்திரிகைச் சூழல்

பக்.3 நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ

பக்.4 இலங்கையின் தேசிய இலக்கியம்

பக்.5 சிறுவர் குரல்

பக்.6 நேர்காணல்: ராஜன் உடன் 100 நிமிடங்கள்

பக்.7 அறிவியல் - மருத்துவம் - ஆரோக்கிய வாழ்வு

# சந்தேக வலையில் தமிழ் கவுன்சிலர்கள்

ஹரோ கவுன்சில் மேயருக்கு இலங்கைத் தூதரகத்தால் அனுப்பப்பட்ட தொலைநகல் நிதர்சனம் இணையத் தளத்தில் எப்படி பிரசுரிக்கப்பட்டது என்ற விசாரணைகளை தலைமை கவுன்சிலர் நவின்சா ஆரம்பித்து உள்ளார். இலங்கைத் தூதரால் கவுன்சில்களின் முன் நடைபெற்ற போராட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட கடிதம் நிதர்சனம் என்ற இணையத்தளத்தல் வெளியானதை அடுத்தே இவ்வி சாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

நிதர்சனம் இணையத் தளத்தை பயங்கரவாதிகளின் இணையத் தளம் எனக் குறிப்பிட்ட நவின்சா இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பத்திரி கைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்து உள்ளார்.

ஹரோ கவுன்சிலிலேயே கூடுதலான மூன்று தமிழ் கவுன்சிலர்களும் ஒரு முஸ்லீம் கவுன்சிலரும் உள்ளனர். தனக்கு அனுப்பப்பட்ட தொலைநகலின் பிரதிகள் கவுன்சிலர்களின் பார்வைக்காக வழங்கப்பட்டதாக தெரிவிக்கும் மேயர் அது பயங்கரவாதிகளின் இணையத் தளத்தில் இருப்பதையிட்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

மனோ தர்மராஜா, தயா இடைக்காடர், கெ சசிகலா ஆகிய மூன்று தமிழ் கவுன்சிலர் களில் தயா இடைக்காடர், சசிகலா இருவருமே நிதர்சனம் இணையத் தளத்தின் முழுமையான ஆதர வைப் பெற்றவர்கள். இவர் களது தேர்தல் பிரச்சாரம், போராட்டங்கள் என்பனவற்றுக்கு இவ்இணையத்தளம் முழு ஆதரவு வழங்கி வருவது இரகசியமான தல்ல. இத்தொலைநகல் இவர் களுக் கூடாக நிதர்சனத்தை அடைந்திருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது வலுவாகி வருகிறது.

தமது அரசியல் எதிரிகள் மீது பாலியல் வக்கிரமான செய்திகளையும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் வைக்கும் நிதர்சனத்துடன் தமக்கு எந்த தொடர்பும் இல்லையென வி.புலிகள் தெரிவிக்கின்றனர். கவுன்சிலர் போல் சத்தியநேசன் மீது சேறு பூசும் நடவடிக்கைகளும் இவ் விணையத் தளத்தால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விரு கவுன்சிலர்கள் மீதான சந்தேகம் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்று நம்பப்படுகிறது.

தொகுப்பு: த ஜெயபாலன்
ரி கொன்ஸ்ரன்ரைன்

## இலங்கை விடயத்தில் ஐ நா மனித உரிமைகள் கவுன்சில் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது

மனித உரிமைகள் கண்காணிப்பு - Human Rights Watch

இலங்கை, சுடான், உஸ்பெகிஸ்தான் ஆகிய மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் ஒக்ரோபர் 6ல் எந்த நடவடிக்கை எடுக்காமல் கூட்டத்தை ஒத்தி வைத்ததாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. இதன் மூலம் உலக மனித உரிமை பிரச்சினையை வெளிப்படுத்தவும் ஐ நா மனித உரிமைக் கவுன்சில் தவறியுள்ளதாக அக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சூடான் கொடுமைகள், இலங்கையில் பொது மக்கள் மீதான தாக்குதல்கள், உஸ்பெகிஸ்தானில் நடக்கும் கூட்டுப் படுகொலைகள் முகத்திற்கு நேர் நடக்கும் போது ஐ நா மனித உரிமைக் கவுன்சில் பெரும்பாலாக மௌனமாகவே இருந்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பிரதிநிதி பெக்கி ஹிக்ஸ் தெரிவித்தார். அவர் முக்கியமான ஒரு மனித உரிமை அமைப்பு, மீறும் நாடுகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தனது நம்பகத் தன்மையை நிரூபிக்க வேண்டிய தேவை அதற்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

## மெற் பொலிஸ் தகவல் கிழக்கு லண்டனில் தாக்குதல் சம்பவங்கள்

கிழக்கு லண்டனில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளது. ஒக்ரோபர் 6 இரவு ஈஸ்ற்ஹாம் பாக்கிங் றோட்டில் உள்ள யாழ் உணவகத்தின் முன் நடந்த வன்முறைச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு உள்ளார். சில இளைஞர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கி கடுமையாக கயப்படுத்தி உள்ளனர்.

வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் தலைவர் கோபால் ஒக்ரோபர் 1 இரவு தாக்கப்பட்டார். ஆலயத்தின் கார்த் தரிப்பிடத்தில் தனது காரை நிறுத்திவிட்டு இறங்கியவரை ஐந்து இளைஞர்கள் கூரிய ஆயுதங்களுடன் தாக்கி உள்ளனர். கோபாலின் நண்பர்கள் சம்பவ இடத்துக்கு வரவும் தாக்கியவர்கள் கலைந்து சென்றுள்ளனர். கோபால் சிறு காயங்களுடன் தப்பித்துக் கொண்டார். இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு உள்ளதாக பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றுமொரு சம்பவத்தில் பாலயோகன் (மாஸ்டர்) என்பவர் அவரது இல்லத்தில் இருந்து அழைக்கப்பட்டு தாக்கப்பட்டு உள்ளார். ஈஸ்ட்ஹாம் முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவில் ஒழுங்கு விதிகளை பின்பற்ற மறுத்த சில இளைஞர்களே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரி விக்கப்படுகிறது. ஆனால் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

15 ஒக் 2006 - 28 ஒக் 2006, குரல் 01

லண்டன் குரல்

## தமிழ் பத்திரிகைச் சூழல்

ஊடகங்களின் செல்வாக்கு என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கருத்துக்களை உருவாக்குவும் ஆட்சிகளை மாற்றி அமைக்கவும் ஊடகங்கள் தயங்குவதில்லை. இவ்வளவு பலம் மிக்க சாதனம் யாரின் கைகளில் உள்ளது என்பதும் அது யாருக்காக சேவையாற்றுகிறது என்பதும் மிக முக்கியமானது. அமெரிக்ககாவின் 75வீதமான பத்திரிகைகளை நான்கு குடும்பங்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. உலகம் முழுவதும் அறிவிக்கப்படும் செய்தியானது 3 தனிநபர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதும் ஆச்சரியமானதே.

உலக நிலை அப்படி இருக்கையில் இலங்கைத் தமிழர்களின் ஊடகங்களை எடுத்தால் அவை பெரும்பாலும் முற்றிலுமாக யாழ் சைவ வேளாளர்களின் கரங்களிலேயே உள்ளது. தமிழகத்தில் மிகப் பலம் மிக்க ஊடகமான சன் தொலைக்காட்சி தி.மு.க வின் கரங்களிலேயே உள்ளது. ஆகவே ஊடகங்களின் செயற்பாடுகள் எப்போதும் சுயாதீனமானவை என்றோ அல்லது புறக்காரணிகள் மட்டுமே பத்திரிகைச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தகிறது என்றோ சொல்லிவிட முடியாது.

பத்திரிகையாளனின் பணி என்பது மிகுந்த பொறுப்பு மிக்கது. பத்திரிகையாளனே வரலாற்றை எழுதும் முதல் ஆசிரியன்.

மேலும் சுயதணிக்கை செய்யும் போக்கும் மௌனமாக இருக்கும் போக்கும் தமிழ் பத்திரிகைகளிடம் காணப்படும் பொதுவான அம்சமாக உள்ளது. ஓர் உண்மையின் இடத்தை மௌனம் மாற்றீடு செய்து கொள்ளுமாயின் அந்த மௌனமும் ஒரு வகையில் பொய் என்றே அர்த்தப்படுத்தப்படும். மக்களிடம் இருந்து செய்திகளை மறைப்பதும் அம்மக்களின் ஜனநாயகத்தை மீறும் செயற்பாடே.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: ரி கொன்ஸ்ரன்ரைன், Dr பி சிவக்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: T திருலிங்கநாதன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
விளம்பரத் தொடர்பு: 079 6658 3460

'லண்டன் குரல்' பத்திரிகை Catamaran Ltd, (Catamaran Communications) இனால் மாதமிரு முறை வெளியிடப் பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

### பிரித்தானியச் சிறைகள் நிரம்புகின்றன

# வதிவிட உரிமையற்றவர்களை திருப்பி அனுப்புவதில் தீவிரம்

பிரித்தானியச் சிறைகள் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. இங்கிலாந்திலும் வேல்ஸிலுமாக 79,806 கைதிகள் சிறையில் உள்ளனர். தற்போது இன்னும் 162 இடங்களே மேலதிகமாக உள்ளது. புதிய கைதிகளை சிறை வைப்பதற்கான இடத்தை உள்துறை அமைச்சர் ஜோன் ரெயிட் கடுமையாகத் தேடிவருகிறார். பொலிஸ் நிலையத்தில் உள்ள கூடங்களை பயன்படுத்துவது பொருளாதார ரீதியில் அதிக செலவீனம் என்பதால் அதனை விட வேறு வழிகளை சிறையிடங்களைத் தேடுகின்றார் ஜோன் ரெயிட்.



இங்கிலாந்தின் சிறைகளில் 200 வரையான தமிழ் கைதிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வதிவிட உரிமையற்றவர்களாக உள்ளனர். கொமான்டர் ஹிச்கொக் (படம்) இவர்களைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக உள்துறை அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

மேலும் சிறையில் உள்ள 11,000 வரையான வெளிநாட்டு கைதிகளைத் திருப்பி அனுப்பவும் முயற்சிக்கப்படகிறது. ஆனால் அதில் பல சட்டச் சிக்கல்களும் உள்ளது. குடிவரவுப் பிரச்சினையான கைதிகளை தடுப்பு முகாம்களுக்கு மாற்றவும் அங்கிருந்து திருப்பி அனுப்பும் யோசனைகளும் ஆராயப்படுகிறது.

மேலும் சிறைக்கூடங்களில் அடைக்கப்படுவோரின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகிறது. அனால் ஏற்கனவே சிறைக் கூடங்களில் சனத்தொகை பெருக்கம் உள்ள நிலையில் இது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

அடுத்த ஆண்டில் 430 இடங்களைக் கொண்ட சிறைக் கூடம் ஆரம்பிக்கப்பட உள்ளது. 2012ல் 88,000 கைதிகளை அடைக்கும் கொள்ளவை இங்கிலாந்து வேல்ஸ் சிறைக்கூடங்கள் கொண்டிருக்கும் என உள்துறை அமைச்சு பேச்சாளர் தெரிவித்தார்.

## கொண்டதே கோலம் என்றால் விவாகரத்துக்கு சட்ட உதவியில்லை

குடும்ப நிபுணர்களிடம் கவுன்சிலிங் செய்ய மறுக்கும் விவாகரத்து கோரும் தம்பதிகளுக்கு சட்ட உதவி மறுக்கப்பட உள்ளது. உறவுகள் உடைந்து போகாமல் தடுக்க அரசு சட்ட உதவி என்ற பிரம்பை உயர்த்தி உள்ளது. விவாகரத்து கோரும் தம்பதிகள் முதலில் கவுன்சிலரூடாக தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்கிறார் யாப்பு விடயங்களுக்கான அமைச்சர் ஹரிஅற்ஹமன். லண்டனில் ஒக்ரோபர் 6ல் பெற்றோர் மத்தியில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை வெளியிட்டார்.

மேலும் விவாகரத்து வழக்குகள் இழுபடுவதை தவிர்க்கும் வகையில் விவாகரத்து வேண்டும் தம்பதிகளுக்கு ஒரே இடத்தில் ஆலாசனைகளை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட உள்ளது. அங்கு தம்பதிகளுக்கிடையே உடன்பாட்டை எட்ட முயற்சிக்கப்படும். இல்லையென்று விவாகரத்து வேண்டுபவர்களுக்கு நிதி, பிள்ளைகளின் பராமரிப்புக்கான நிதி என்பன பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

## புதிய காரை சொசைட்டி உதயம்

காரை வெல்பெயர் சொசைட்டிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் தீர்க்கப்படாததால் அதன் அதிருப்தியாளர்கள் புதிய அமைப்பை உருவாக்கி உள்ளனர். இதற்கு சர்வதேச காரை அபிவிருத்தி ஒன்றியம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒக்ரோபர் 1ல் காரைநெற் தள இயக்குநர் ரி சோதிலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்றது.



சோதிலிங்கம்(படம்) தனது உரையில் ”சைவமும் தமிழும் வளர்த்த எமது பிறந்த பூமியாகிய, காரைநகர் சமூகத்தை வளப்படுதத்த வேண்டுமென்ற பரந்த உள்நோக்குடன் நாம் இங்கு கூடியிருக்கின்றோம், காரைநகர் கலாச்சார பண்பாடுமிக்க பூமியாக விளங்கியதோடு குட்டி பணக்கார நாடு என்ற பெயருடன் சிறப்புற்று விளங்கிதையும் நாம் மறந்திடமுடியாது. காரைநகர் பல கல்விமான்களையும் போராளிகளையும், வர்த்தகப் பெரு மக்களையும் கொண்டு சிறப்புற்று விளங்கிய பூமியாகும்” என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.

70 பேர்வரை கலந்து கொண்ட இக்கூட்டத்தில் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய கல்துரையாடல்கள் இடம்பெற்றது. உதவித் திட்டங்கள் தன்னிச்சையாக அல்லாமல் உறுப்பினர்களின் கலந்தாலோசைனையுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும், அபிவிருத்தித் திட்டங்கள் நீண்டகால நோக்கில் செயற்படுத்தப்பட வேண்டும் போன்ற பல்வேறு அம்சங்கள் இதில் கலந்துரையாடப்பட்டு உள்ளது.

## ஐந்தில் ஒரு வீட்டை வாங்குவதானால் 7500 பவுண் stamp duty செலுத்தப்பட வேண்டும்

வீடுகள் தொடர்ச்சியாக விலையேறி வருவதால் இங்கிலாந்தில் உள்ள வீடுகளின் விலை உயர்ந்து வருகிறது. அதனால் அண்ணளவாக ஐந்தில் ஒரு வீட்டின் பெறுமதி 250,000தை தாண்டுகிறது. அதனால் 3வீத முத்திரை வரி செலுத்த வேண்டி வருகிறது. வீட்டு விலைகள் இதே போக்கில் உயர்ந்தால் முத்திரை வரியில் அரசு மாற்றம் கொண்டுவராவிட்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5.4 மில்லியன் வீடுகள் இந்த முத்திரை வரி எல்லைக்குள் சிக்குமென மதிப்பிடப்படுகிறது.

தற்போத 125,000 பவுண்களுக்கு வீடு வாங்குவதானால் முத்திரை வரியில் இருந்து விலக்கு உண்டு. 250,000 - 500,000 பவுண்களுக்கு வாங்கும் போது 3வீதம் முத்திரைவரி செலுத்தப்பட வேண்டும். அதற்கு மேல் சென்றால் 4 வீதம் முத்திரைவரி செலுத்தப்பட வேண்டும்.

தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது முதல் வீட்டு விலைகள் 162 வீதம் அதிகரித்து இருந்த போதும் வரிவிலக்கு எல்லைகள் பெருமளவில் மாற்றப்பட வில்லை. இந்த உயர்வரிகள் அரசின்




திறைசேரியை நிறைப்பதில் முக்கிய இடத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. 2000 - 01ல் முத்திரை வரி மூலம் 1.2 பில்லியன் பவுண்கள் சேகரிக்கப்பட்டது. சென்ற ஆண்டில் இது 3.4 பில்லியன் பவுணாக அதிகரித்தது.

வரி விதிப்பதற்கு கோர்டன் பிறவுண் பயன்படுத்தும் புதிய உத்தி இதுவென நிழல் நிதயமைச்சர் ஜோர்ஜ் ஒப்ஸ்ரோன் தெரிவித்தார்.

# நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ!

## கிஸ்ஸிங் சுவாமி:

இந்த சுவாமிக்கு இருட்டடி விழும் என church க்குப் போற பலர் சரியாக பீல் பண்ணுறாங்கள். இந்த மனுசன் போற போக்கைப் பார்த்தால் இது கட்டாயம் நடக்கும். இந்த சுவாமி பூசைக்கு வாற பொம்பிளையளை எல்லாம் கட்டிப்பிடித்து "நைஸ் டு சீ யூ!" என்று சொல்லி கிஸ் அடிக்கிறாராம். இந்த சுவாமியின்ர லீலைகளை பொறுக்க முடியாமல் இந்த கத்தோலிக்க சனங்கள் இப்ப பூசைக்கு பிந்தி வந்து பூசை முடிய முதல் ஓடிவிடுகினமாம். சுவாமில் அவ்வளவு பயபக்தி.

## ராமரின் பிறந்ததினம்:

நம்மட தலைவர் ராமநாதன்ர பிறந்ததினத்துக்கு கட்டாயம் அடுத்தமுறை தேசிய விடுமுறை விடவேணும். வாற போற சனம் என்ன......... அவை பேசுகின்ற பேச்சென்ன.......... நினைக்கவே புல்லரிக்குது. "என்னைப் பொறுத்த அளவில் எனக்கு இரண்டு தலைவர்கள். ஒருவர் வன்னியில் மற்றவர் இல்பேர்ட்டில் இன்சுறன்ஸ் செய்பவர்" என்று பேசுகிறார் தூள் விநாயகர் தர்மகத்தா. கேட்டால் தலையால போகுது. மனுசன் நல்ல மனுசன் தான். அதுக்காக டூ மச்சா மைலேஜ் செய்யக்கூடாது.

## கோயில் இல்லா.....:

ஊரில தேர்த்திருவிழா நாட்கள்ள பல கசமுசாக்கள் நடக்கும். சாதிச்சண்டைகள், வெட்டுக்கொத்துக்கள், பொம்பிளைக் கடத்தல் .......... etc. எங்கட கலாச்சாரத்தை பின்பற்றுறதில லண்டன் எப்பவும் முன்னணி தான். ரூறற்றிங் கோயில் தேர் அன்று பொலிஸ் வந்து நம்மட சீவலப்பேருபாண்டி ஐயாவை அள்ளிக் கொண்டு போனாங்கள். ஏற்கனவே ஒரால் ரேப் கேசில உள்ளுக்க. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முற்றிலும் உண்மை. கோயில் இல்லாத ஊரில குடியிருந்தால் no entertainment - வெரி போரிங்.

## செந்தோழர்கள்:

தங்களுக்குள் இழுபறி படுவதில இந்த பிச்சைக்கார கொம்யூனிஸ்டுக்களை யாரும் வெல்ல முடியாது. தங்களுக்கு தாங்களே புலம்பும் இலக்கிய வட்டக் கூட்டம் இந்த முறை லண்டனில நடந்தது. வட்டம் என்றால் இதொன்றும் பெரிய வட்டம் இல்லை. சும்மா பிம்பொம் ஐ விட சிறிய வட்டம். அதிலயும் ஐயற்ற பரிவாரங்கள் கொஞ்சம் பகிஸ்கரிப்பாம். இந்த முறை வரேல்லை. அதுக்கு கொஞ்சப் பேர் விமர்சனம் வேற. சரியா பீல் பண்ணுகினம். இதெல்லாம் எனக்கு பிரச்சினையில்ல பாருங்கோ. ராஜேஸ் அக்கா என்னட்ட இருந்தும் 100 பவுணை கிளப்பிப் போட்டா. உந்த சீஜஏ, றோவிட்ட சொல்லி அவைக்கு கொஞ்சக் காசு குடுத்தா என்ர 100 பவுன் வருமெல்லே.

## Special Offer:

இப்ப லண்டனில புது fashion ஒன்று வந்திருக்கு. வன்னிக்கு போய் நம்மட தலைவர்களோட நின்று படம் எடுத்துக்கொண்டு வந்து அதை வைச்சு இங்க மைலேஜ் செய்யினம். நான் தலைவரோட நின்று படம் எடுத்தனான் என்று வீடு வாங்க வந்த ஒருவரை பிடித்து அறுக்கிறாராம் இந்த எஸ்டேட் ஏஜன்ட் பிரமுகர். இவர் 2 மாதத்துக்கு முன் சிங்கள பத்திரிகையொன்றில் போஸ் கொடுத்து படமும் பேட்டியும் கொடுத்தது வேற விடயம். அடுத்த மாதம் அம்மானுடன் நின்று போஸ் கொடுத்து பேட்டி கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒவ்வொரு தலைவருடனும் நின்று படம் எடுக்க வேறு வேறு ரேட்டாம். அத்துடன் தலைவருடன் படம் எடுத்தால் அரசியல் தலைவருடன் படம் free என்று special offer வேறு உள்ளதாம்.

## Feel Sorry:

செக்சுவல் பீலிங் எல்லாரிட்டையும் இருக்கும். sexual fantacy அது ஒன்றும் தப்பில்ல. ஆனா சிலபேருக்கு இந்த விசயத்தில மட்டும் மற்றவையப் பற்றி நினைக்கிறதில ஒரு ஆர்வம். அதுகள் உந்த வெப்சைட் வழிய தாராளமா உலாவுது. இது பீலிங் இல்ல. இது ஒரு மனநோய் பாருங்கோ. இனிமேல் இப்படி மற்றவையைப் பற்றி விசயங்கள் வந்த அதை எழுதினதுக்காக நீங்கள் அவைய கோபிக்கக் கூடாது. அவைக்கு அப்படி ஒரு பிரச்சினை இருக்கென்றே தெரியாது. மனநோயில உள்ள பிரச்சினை அதுதான். Feel sorry for them.

# ஒன்பது உள்ளாட்சி பிரிவுகளில் வெள்ளையர்கள் சிறுபான்மை நாமே வீட்டு உரிமையாளர்கள்

லண்டனின் 32 உள்ளாட்சிப் பிரிவுகளில் ஒன்பதில் வெள்ளையினத் தவர்களது சனத்தொகை 50 வீதத்திலும் குறைவாக உள்ளது. பிறன்ற் உள்ளாட்சிப்பிரிவே குறைவான வெள்ளையின மக்களைக் (29 வீதம் மட்டுமே) கொண்ட கவுன்சிலாக உள்ளது. பிறன்ற் பல்லினத்தன்மை பரந்துள்ள உள்ளாட்சிப் பிரிவாக உள்ளது. அதனை அடுத்து உள்ள ஹரோ உள்ளாட்சிப் பிரிவு பலசமயத்தன்மையுடைய உள்ளாட்சிப் பிரிவாக உள்ளது. மேலும் நியூஹாமில் 34 வீதமான வெள்ளையினத்தவர்களே வாழ்கின்றனர்.

2001 மக்கட்தொகை கணக்கெடுப் பின் படி பிரித்தானியாவில் 4.6 மில்லியன், அதாவது 7 வீதமானவர்கள் சிறுபான்மையினங்களைச் சேர்ந்த வர்களாவர். பிரித்தானிய மக்கள் தொகையில் 41மில்லியன் பேர் கிறிஸ்தவர்களாகவும் 8.5 மில்லியன் பேர் எந்த மதத்தையும் பின் பற்றாதவர்களாகவும் உள்ளனர். 1.5 மில்லியன் பேர் முஸ்லீம் மதத்தை பின்பற்றுகின்றனர். இவர்களில் 60,000 பேர் வெள்ளையினத்தவர்கள்.

சிறுபான்மையினங்கள் தொடர்ந் தும் வேலை வாய்ப்புகளில் பின்நிற்கின்றனர். முஸ்லீம் சமூகமே கூடுதலாக பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் சிறபான்மையினங்களைச் சேர்ந்த இங்கு பிறந்த பட்டதாரிகள் உட்பட வெள்ளையின பட்டதாரி களைக் காட்டிலும் அதிகம் வேலை அற்றவர்களாக உள்ளனர்.

ஆனால் புள்ளிவிபரங்களின் படி இந்தியர்கள் வெள்ளையினத்தவரைக் காட்டிலும் கூடுதலாக சொந்த வீடுகளைக் கொண்டுள்ளனர். இந்தியர் கள் 76 வீதமானோர் சொந்த வீடுகளைக் கொண்டிருக்க வெள்ளையினத்தவர்கள் 69 வீதமானோரே சொந்தமாக வீடுகளைக் கொண்டு உள்ளனர். ஆனால் 1991ல் இந்தியர்கள் 82 வீதமானோரும் வெள்ளையர்கள் 66 வீதமானோரும் சொந்த வீடுகளைக் கொண்டிருந்தனர்.

வீட்டில் குடியிருப்பவர்களைப் பொறுத்தவரை பங்களாதேசியர்களின் வீடுகளிலேயே அதிகப்படியானோர் (4.5 பேர்) குடியிருக்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து பாகிஸ்தானியர் (4.1பேர்). வெள்ளையினத்தவர்களின் வீடுகளில் சராசரியாக 2.3 பேர் மட்டுமே உள்ளனர்.

சிறுபான்மையினங்களில் இந்தியர் களே 2 வீதமாக, பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்களின் சனத்தொகை 1.1 மில்லியன். அடுத்து 0.75 மில்லியன் பாகிஸ்தானியர்களும் கரீபியன் கறுப்பர்கள் 0.56 மில்லியனாகவும் பங்களாதேசியர்கள் 0.28 மில்லியனா கவும் உள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் மெற்றோபொலிட்டன் நகரங்களிலேயே வாழ்கின்றனர். புதிய வரவுகளும் அவர்களைச் சுற்றியே வாழ்கின்றனர்.

1960,1970க்களில் கல்வி மற்றும் பொருளாதாரக் காரணங்களால் மிகச் சிறய அளவிலான இலங்கைத் தமிழர்கள் பிரித்தானியாவுக்கு புலம்பெயர்ந்தனர். ஆனால் இவர்கள் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் 1980க்களில் ஆரம்பித்த இனமுரண்பாட்டைத் தொடர்ந்து பிரித்தானியாவுக்கு நூற்றுக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். 1990 க்களில் இத்தொகை பல ஆயிரங்கள் ஆனது. அக்காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் 12,000க்கும் மேற்பட்டவர்கள் பிரித்தானியாவில் தஞ்சம் கோரினர்.

2001 மக்கட்தொகை கணக்கெடுப் பின் போது தமிழர்கள் தனியான இனமாக வகைப்படுத்தப்படவில்லை. அவர்கள் இந்தியர்கள், அல்லது Other Asian என்ற வகைப்படுத்தலுக்குள்ளேயே அடக்கப்பட்டனர். அதனால் பிரித்தானியாவில் தமிழ் மக்கள் பற்றிய சரியான புள்ளிவிபரங்கள் இல்லை என்றே சொல்லலாம். தஞ்சம் கோரியோர் போன்ற விபரங்களின் அடிப்படையில் அண்ணளவாக 100,000 தமிழர்கள் லண்டனிலும் புறநகர் பகுதியிலும் வாழ்வதாக மதிப்பிடப்படுகிறது. தமிழர்கள் பெரும்பாலும் இந்தியர்களாகவே வகைப்படுத்தப்படுகின்றனர்.

2011 மக்கட்தொகை கணக்கெடுப் பின் போது தமிழர்கள் தமக்கென தனியான வகைப்படுத்தலை கோருவது தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் ஆய்வுகளுக்கு இன்றியமையாதது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# 33வது இலக்கியச்சந்திப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

18 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த ஒரு பகுதி மக்களின் இருப்பாகவும் இருப்பின் குரலாகவும் இருக்கின்ற இலக்கியச் சந்திப்பு 33வது முறையாக 2 நாட்கள் 23.09.06 - 24.09.06 வரை இலண்டனில் ஈஸ்றஹாம் பகுதியில் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு கீழ்வரும் தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றியது.

1. இலங்கையில் நடைபெற்று வரும் யுத்தநிறுத்த மீறல்கள் மற்றும் யுத்தத்தை உடனே நிறுத்தி பேச்சுவார்த்தைகளை மீண்டும் மேற்கொள்ளுமாறும் இலங்கையின் தமிழ், முஸ்லீம், மலையக, சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிரந்தர ஜனநாயக அரசியல் தீர்வினை எல்லாத் தரப்பினரும் முன்வைக்க வேண்டும்.

2. அண்மையில் நடைபெற்ற கெப்பிட்டிக்கொலாவ, மூதூர், முல்லைத்தீவு, பொத்துவில் போன்ற இடங்களில் நடைபெற்ற அப்பாவி மக்களின் மீதான படுகொலைகள் வன்மையாக கண்டிக்கப்பட்டதுடன் இவை போன்ற படுகொலைகள் இனி ஒரு போதும் இடம்பெறாதவாறு இலங்கை அரசும் த.வி. புலிகளும் உறுதியளிக்க வேண்டும்.

3. வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதியில் விசாரணையின் பெயரால் கைது செய்வதையும் வெள்ளை வானில் கடத்துவது, காணாமல் போகச் செய்வது, கொல்லுவது, இனம் தெரியாதோர் மற்றும் பல்வேறுபட்ட படைகள் என்ற போர்வையில் நடத்தப்படும் கொலைகள் போன்றவை உடனே நிறுத்தப்பட வேண்டும்.

4. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்கள் தங்கள் இடங்களில் பாதுகாப்புடனும் இறைமையுடனும் வாழ வழி செய்ய வேண்டும்.

5. இலங்கையில் நடைபெறும் சட்டப்புறம்பான படுகொலைகள் அனைத்தும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்பட வேண்டும்.

# காரை சுந்தரம் பிள்ளையின் நினைவும் நூல் வெளியீடும்



அமரர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் ஈழத்து 'மலையக கூத்துக்கள்' 18வது நூல் வெளியீட்டு விழா ஒக்ரோபர் 8ல் Sudbury Primary Schoolல் திரு திருமதி விக்னேஸ்வரன் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றலுடன், ஆரம்பமாகியது. கூட்டத்தை நூல் ஆய்வாளர் மு நித்தியானந்தன் தலைமை வகித்தார், இவ் விழாவானது அமரர் காரை சுந்தரம்பிள்ளையின் ஓராண்டு நினைவையொட்டி நடைபெற்றது.

செல்வி அபிராமி நவநீதநாதன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. காரை சுந்தரம்பிள்ளையின் மகன் திருப்பரங்குன்றன் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து மு நித்தியானந்தன் தலைமையுரை நிகழ்த்தினார். புலவர் இளவாலை அமுது ஆசியுரை வழங்கினார். கலாநிதி இ நித்தியானந்தன், எஸ் கோணேசலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார், சு ஸ்ரீகாந்தலிங்கம் நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதலாவது பிரதியை திருமதி இந்திராவதி சுந்தரம்பிள்ளை வழங்க அவைக்காற்றுக் கழக இயக்குநர் க பாலேந்திரா நூலைப் பெற்றுக்கொண்டார். (படம்) ஏ சீ தாசீசியஸ், சாம் பிரதீபன், த ரவீந்திரன் ஆகியோர் நூலாய்வு செய்தனர். காரை சுந்தரம்பிள்ளையின் மகள் மாதவி சிவலீலன் நன்றியுரை வழங்கி விழாவை நிறைவு செய்தார்.

# இலங்கையின் தேசிய இலக்கியம்

~ கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் (இலங்கை) ~

இனங்களுக்கிடையிலே ஒற்றுமை, புரிந்துணர்வு, பரஸ்பர நல்லிணக்கம் ஆகிய எண்ணக்கருக்கள் எழுத்துக்களிலும், மேடைப்பேச்சுகளிலும், இலத்திரனியலூடகப் போட்டிகளிலும், பெரிதாக பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் 'இலங்கையின் தேசிய இலக்கியம்' என்ற விசாலமான கருப்பொருள் பற்றிச் சிந்திக்க வேண்டியதன் அவசியம் இன்றைய காலத்தின் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

இலங்கையின் தேசிய இலக்கியப் பரப்பில் எழுத்துத்துறை வளர்ச்சிக் கான இலங்கை வாழ் சிறுபான்மைச் சமூகத்தினரின் பங்களிப்பு விசாலமானதாகும். 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து இத்தகைய பங்களிப்பு முனைப்புடன் இடம்பெறலாயிற்று.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்துச் சிறுபான்மையினரின் தமிழிலக்கியப் பாங்கினை ஆராயும்போது விசேடமாக மூன்று பிரதான விடயங்களின் உள்ளடக்கத்தினை அவதானிக்கலாம்.

*சமயக் கருத்துக்களை மையமாக கொண்ட இலக்கிய வடிவங்கள்.*

*சமூகச் சிந்தனைகளை அடிப்படையாக கொண்ட இலக்கிய வடிவங்கள்.*

*தேசிய உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவங்கள்.*

இங்கு சமயக் கருத்துக்களை மையமாகக் கொண்ட இலக்கியங்கள் என்னும் போது பிரித்தானியரால் திணிக்கப்பட்டு வந்த மிஷனரி முறைக்கெதிராகத் தத்தமது சமயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி, தத்தமது சமயத்தினை முதன்மைப்படுத்தி, முக்கியப்படுத்தும் வகையிலான இலக்கிய வடிவங்களை இனங்காட்டலாம்.

சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் எனும் போது மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்நிய கலாசாரத் தாக்கங்களினால் சீரழிவுகளை எதிர்நோக்கி வந்த தத்தமது சமூகத்தினரை பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி தத்தமது சமூகத்தினரின் கலாசார முக்கியத்துவங்களையும், சமூக மரபுகளையும், விழுமியங்களையும் முதன்மைப் படுத்துவதனூடாக சமூகத்தினரின் கல்வி, பொருளாதார, கலாசார எழுச்சியினைத் தூண்டத்தக்க இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

அதேபோல தேசிய உணர்வுகளின் வெளிப்பாடு எனும்போது அடிமைத்துவ ஆட்சி முறையிலிருந்து எமது தேசம் விடுதலையாக வேண்டும் என்ற சுதந்திர வேட்கையின் வெளிப்பாடான இலக்கியங்களைச் சுட்டிக்காட்டலாம். மேற்குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களால் முன்வைக்கப்பட்ட இலக்கிய வடிவங்களில் மாத்திரமல்ல பெரும்பான்மைச் சமூகத்தினரின் சிங்கள இலக்கியங்களிலும், முச்சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட ஆங்கில இலக்கியங்களிலும் காணமுடியும். ஆனால், இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினரின் தமிழ் இலக்கியங்கள் பற்றிய பதிவுகள் முறையாக பேணப்படாமையினாலும் அவை ஆவணப் படுத்தப்படாமையினாலும் இலங்கை தேசிய இலக்கியப் பரப்பில் தமிழ் மொழி மூல இலக்கியப் படைப்புக்களினதும், படைப்பாளிகளினதும் பரிமாணம் மதிப்பீடு செய்யப்படாமலே மறைந்து போய்விடுகின்றது.

மேற்கத்திய இலக்கியங்கள், மேற்கத்திய இலக்கியவாதிகளைக் கூட எடுகோளுக்காக உள்வாங்கும் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ் இலக்கியங்கள், தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய ஆய்வுகள் உள்வாங்கப்படாமல் இருக்கின்றன என்றால் உரிய பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமலிருப்பதும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி இலக்கியங்கள் மீது ஆர்வம் காட்டப்படாமலிருப்பது, இனங்களுக்கிடையே நல்லிணக்கம், நல்லுறவு என்ற கதையாடல்களில் ஈடுபடும் இக்காலகட்டத்திற்குப் பொருத்தமானதொரு விடயம் எனக்கூறிவிட முடியாது. நல்லிணக்கம், நல்லுறவு எனும் வார்த்தைப் பதங்கள் வெளிவாரியானது அல்ல. உள்ளார்ந்த உணர்வுகளுடன் சங்கமித்து, உள்ளார்ந்த சிந்தனைகள் பரிமாறப்படும் போதே அப்பதங்களின் அழுத்தம் யதார்த்தம் பெறக்கூடியதாக இருக்கும். இத்தகைய உள்ளார்த்தமான சிந்தனைகளை அறிந்து கொள்ள இலக்கியங்கள் ஆணிவேரானவை என்றால் மிகையாகாது.

தேசிய இலக்கிய நிலைபற்றிய எண்ணக்கருவினை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழ் இலக்கியப்பரப்பினை நோக்கின் தமிழ் இலக்கியத்துக்குள்ளும் நாமே உருவாக்கிக் கொண்ட பிரதேச ரீதியான இலக்கியம், இனரீதியான, சார்பு ரீதியான இலக்கியம் என்பன தமிழ்மொழி எனும் உணர்வினைமீறி சுயநலமிக்க - குறுகிய போக்குமிக்கதாக மாறிவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகைய நிலைப்பாடுகள் விஸ்வரூபமாக அமைவதினால் தமிழ் இலக்கியத்தில் கடந்த கால கட்டங்களில் சாதிக்கப்பட்டவை யாவை? சாதித்தவர்கள் யார்? முன்வைக்கப்பட்ட உணர்வுகள் யாவை? அவற்றின் பின்னணிகள் யாவை? என்பன புதிய தலைமுறையினருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன.

எனவே, ஈழத்துத்தமிழ் இலக்கியத்தினை எந்தவித பாகுபாடுமின்றி ஒருமுகப்படுத்த வேண்டியதும், அவற்றின் பதிவுகளைத் திரட்ட வேண்டியதும், அவற்றினை ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகிவிட்டது. ஏனெனில், தேசிய இலக்கிய நீரோட்டத்தில் எமது தமிழ் இலக்கியங்களின் விபரங்களையும் இணைக்க வேண்டுமானால் முதலில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக ஈழத்தில் வெளிவந்த தமிழ்நூல்கள் பற்றியும், நூலாசிரியர்கள் பற்றியும் பொதுவான பதிவுகளை மேற்கொண்டு அவற்றை ஆவணப்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். இந்நிலையின் உணர்வுபூர்வமான சிந்தனைகளின் வெளிப்பாடுகள் 1990க்களில் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக - இலங்கையில் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், சிறந்த நிர்வாகசேவை உத்தியோகத்தரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்பதிவுகளை 'சுவடி ஆற்றுப்படை' எனும் தலைப்பில் நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை 'சுவடி ஆற்றுப்படை' நான்கு தொகுதிகளிலும் கண்டுகொள்ள முடியும். 1850 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் 1977 நூல்கள் பற்றிய விபரங்கள் எஸ்.எச்.எம். ஜெமீலின் 'சுவடி ஆற்றுப்படை' யில் பதிவாகியுள்ளன. இலக்கியப் பதிவு, இலக்கிய ஆவணப்படுத்தலில் இது ஒரு முக்கிய கட்டமாகும்.

இதே பணியினை என். செல்வராஜா அவர்களும் மேற்கொண்டு வருகின்றார். 'சுவடி ஆற்றுப்படை' இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரமே ஆவணப்படுத்தியது. ஆனால், என்.செல்வராஜா அவர்களுடைய 'நூல்தேட்டம்' ஓர் இனத்தவரை மாத்திரம் மையப்படுத்தாமல் தமிழ் எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள், புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள் என்ற அடிப்படையில் தமிழ்மொழி மூலமாக இலங்கையர்களால் எழுதப்பட்ட அனைத்து நூல்களையும் ஆவணப்படுத்த முயன்றுள்ளது குறிப்பிடத்தக்கது.


**உண்மைகள் உறங்குவதில்லை.**

# Ceylon in the British Empire

By Maanas Poologalingam



Imperial Flag



Ceylon was placed under the British Crown in 1798 however the first time the English communicated with Ceylon was in 1763, when some of the British embassy in Madras, India, went to the King of Kandy. Kandy was a province of Ceylon with a majority of Sinhalese people. It was situated in the highlands with a small population. Before the British got hold of Ceylon, Holland was ruling it so Britain captured Ceylon and controlled it. Slaves from India were taken to Ceylon to work there to get all sorts of goods.



I believe that Britain wanted Ceylon to trade by using its resources and sell the items. Britain may also have wanted Ceylon for Imperialist reasons as they took Ceylon off Dutch control.

Ceylon had many luxuries that Britain would have wanted, of which tea was the main desire. Ceylon tea leaves (Right) were used to make delicious cups of tea. Sri Lankan tea is still sold and used by the English today. Other things that the British wanted were cocoa, cinnamon (Left), and many spices such as cardamom. Rubber was also accessible in Ceylon. Riches were available, such as pearls, rubies, emeralds, sapphires and so on.



Ceylon was part of the British Empire for 150 years. Ceylon broke free from the British Empire in 1948, mainly due to the fact that Britain was not able to control a large Empire after the damage that World War II caused, which took place from 1939 to 1945. In 1972, Ceylon adopted the name of Sri Lanka which is what the country is called today. Sri Lanka is an independent country.



33வது இலக்கியச் சந்திப்பில் பாரதி தமிழ் பள்ளி மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வு

# INTERNATIONAL DAYS IN OCTOBER

01 - International Day of Older Persons
05 - International Teachers' Day (UNESCO)
09 - World Post Day (UPU)
10 - World Day against Death Penalty
11 - Disaster Reduction Day
16 - World Food Day (FAO)
17 - International Day for the Eradication of Poverty
24 - United Nations Day
24 - World Development Information Day

# சிறாரின் போதனாமுறைகள்

ஆதிகாலத்திலிருந்து இன்றுவரையுள்ள போதனாமுறைகளை இப்படி நிரல் செய்யலாம்:

1. குரு சிஷ்ய முறை
2. குருகுலவாச ஓலை ஏட்டு முறை
3. கிராமங்களில் குடிசைகளிலும்; மரங்களின் கீழும்; மண்ணில் எழுதியும்; ஆசானின் வாய்ப்பாடுகள் மூலமும் சிக்கனமான சிறிய ஆரம்ப நூல்களுடன் குறைந்த அளவில் பென்சில்; கடுதாசி மூலமும் அளிக்கப்படும் குறுகிய; அத்திவார ஆரம்பக் கூட்டுக் கல்வி அல்லது திண்ணைப் பள்ளிக் கல்வி
4. நடைமுறையில் உலகெங்கும் பிரபலமடைந்துள்ள கரும்பலகை; வெண் கட்டி; பாடநூல்கள்; அட்டவணைகள்; வகுப்புகள்; பேனா; கடுதாசி; எழுத்தப்பியாசங்கள் மூலம் அரசாங்களால் அமுலாக்கிக் கட்டுப் படுத் தப்படும் பாடசாலைக் கூட்டுக்கல்வி
5. பெரும்பாலும் தனியார் நிறுவனங்களினால் விளையாட்டு; வரைதல்; கைவேலைகள் பாவிக்கும் மொன்ரிசறி முறையென வழங்கப்படும் பாலர் கல்வி முறையும் அதைத் தழுவிய நவீன பரிசோதனை முறைகளும்.
6. மின் கணனி; படக்காட்சிகள்; லிங்குவாபோன் முதலிய கருவிகளுடன் கூடிய அதி நவீன முறைகள்.

தகவல்: பேராசிரியர் கோபன் மகாதேவா

## - சிறுவர் குரல் -

**சிறுவர் குரல் பகுதியில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற விரும்பினால் அவற்றை எமக்கு எழுதி அனுப்பிவைக்கவும். சிறு கதை, கவிதை, கட்டுரைகள், துணுக்குகள், நிகழ்வுகள், உங்கள் விடுமுறைப் புகைப்படம் எனப் பலவற்றையும் இப்பகுதியில் சேர்த்துக் கொள்ள உள்ளோம்.**

# My Holiday in Disney Village



I went to disneyland with Juliee ,Segaini, My self (Karnan) Kanishikan, And my little brother Vanan.

I enjoy it over there. I wish I live there.

Karnan, Cann Hall Primary School

ராஜன் என பெரும்பாலும் அறியப்பட்ட அணுசிறிகுமார் தாமோதரம் பிள்ளை இவ்விதழின் நேர்காணல் பகுதியை அலங்கரிக்கிறார். அண்மைக் காலமாக பல்வேறு அரசியல் மற்றும் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் இவர் ஒரு பிரிவு ஐரோப்பியத் தமிழ் அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் ஒரு சர்ச்சைக்குரியவராகவும் உள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்றம் முன், பிரதமரின் உத்தியோகபூர்வமான வாசஸ்தலத்தின் முன், ஈழபதிஸ்வரர் ஆலயத்தின் முன் போராட்டங்களை ஒழுங்கு செய்து நடத்திய ரஜனே, கவுன்சிலர் தயா இடைக்காடரின் உண்ணா விரதத்தையும் ஏற்பாடு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


தனிநபர்கள் மீதான மூன்றாம்தர தாக்குதலை மேற்கொள்ளும் சர்ச்சைக்குரிய'நிதர்சனம்'இணையத்தளத்துடன்மிகநெருங்கியதொடர்பைக் கொண்டிருப்பதான குற்றச்சாட்டு இவர் மீதுள்ளது. இதன் காரணமாக இவர் 'ரவுடி ராஜன்' எனவும் இவரது எதிரிகளால் பெயர் சூட்டப்பட்டார்.

மேலும் வி.புலிகளின் சுவிஸ் பொறுப்பாளராக இருந்து தற்போது கனடாவில் தஞ்சம் நிராகரிக்கப்பட்டிருக்கும் முரளியின் வலது கரமாகச் செயற்பட்ட ராஜன் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் பெற்றவர். ஆரம்பகாலங்களில் தற்போது சர்ச்சைக்குரியதாக கருதப்படும் ரிபிசி வானோலியில் இணைந்திருந்தவர். இதனால் இவர் அப்போது 'ரிபிசி ராஜன்' என்றழைக்கப்பட்டார். ரிபிசி ராம்ராஜின் முன்னாள் நெருங்கிய நண்பர்.

லண்டன் குரல் வாசகர்களுக்காக ஒக்ரோபர் 1ல் ராஜனை அவரது ஹரோ இல்லத்தில் சந்தித்தோம். இன்முகத்துடன் வரவேற்று எளிமையான தமிழில் நம் கேள்விகளுக்கு பதிலளித்தார். அரசியல் சொல்லாடல்களைக் கோர்த்து எம்மையும் வாசகர்களையும் குழப்பாமல் அவரது பதில்கள் நேரடியாகவே அமைந்தது.

# ராஜன் உடன் 100 நிமிடங்கள்








**ல.குரல்: இலங்கையில் கடந்த 25 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது வன்முறைகளும் ஒடுக்கு முறைகளும் இடம்பெறுகிறது. ஆனால் அண்மைக்காலமாக பல போராட்டங்களை சூழற்சி முறையில் மேற்கொண்டு வருகிறீர்கள். இந்த திடீர் போராட்டங்களின் பின்னணி என்ன ?**

ராஜன்: வி.புலிகளது தடையை நீக்குமாறு கேட்டே எமது போராட்டங்கள் நடத்தப்பட்டது. இலங்கையில் நடைபெறும் படுகொலைகளை நிறுத்தச் சொல்லியும் தான் போராட்டங்களை மேற்கொண்டோம். என்ன தான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இன்று புலிகள் மட்டுமே சிங்கள அரசாங்கத்தை தட்டிக் கேட்பவர்களாக உள்ளனர். ஈபிடிபி மற்றும் ஏனையவர்கள் அரசாங்கத்துடனும் இந்தியாவுடனும் சேர்ந்து நிற்கின்றனர். அவர்களும் மக்களுக்காகத் தட்டிக் கேட்டால் நாங்கள் அவர்களுக்கும் ஆதரவு தருவோம்.

திடீர் போராட்டம் என்றில்லை. ஈழபதீல்வரர் கோயிலில் தான் ஆரம்பித்தனாங்கள். கோயில் கணக்கை கேட்டு நான் தனிமனிதனாகவே ஆரம்பித்தேன். ஜெயதேவன் (ஈழபதீஸ்வரர் ஆலயத் தலைவர்) விழிப்பு, தேனி இணையத்தளங்கள் மூலம் என்னைப் பற்றிய பொய்யான வதந்திகளை வெளியிட்டார். கணக்கை கேட்டதற்கு பதிலளிக்கவில்லை. ஈழபதீஸ்வரர் கோவில் மக்களால் ஆரம்பிக்கப்பட்டது. புலிகளால் ஆரம்பிக்கப்படவில்லை. புலிகள் ஏமாற்றினாலும் நாங்கள் புலிகளையும் கேட்போம்.

பெரும்பாலான கோவில்களில் ஏமாற்று வேலைகளே இடம்பெறுகிறது. ஆனால் அவர் (ஜெயதேவன்) செய்த எளிய வேலை ஈழபதீஸ்வரர் கோவில் மூலம் தமிழ் மக்களிடம் பணத்தை பெற்று சிங்களக் கொடியையும் இந்தியக் கொடியையும் பிடிச்சுக்கொண்டு இருக்கிறது.

2005 மார்ச் வரை அவர் புலியுடன் இருந்தவர். அப்போது அவரிடம் (ஜெயதேவனிடம்) நான் புலிகளின் படுகொலைகள் பற்றியும் சிறுவர்களைச் சேர்ப்பது பற்றியும் பணம் சேகரிப்பது பற்றியும் கேட்டபோது எனக்கு அரை மணி நேரம் விளக்கம் தந்து புலிகளை நியாயப்படுத்தினார். அவர் வானொலியில் கூறுகிறார் தான் அன்றும் புலி இன்றும் புலி. ஆனால் இன்று ஜனநாயகப் புலி என்று.

**ல.குரல்: இந்த போராட்டங்களினால் நீங்கள் சாதித்தது என்ன ?**

ராஜன்: பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை. ஆனால் பிபிசி க்கு முன்னால் இடம்பெற்ற போராட்டத்திற்குப் பின் அவர்கள் என்னுடன் தொடர்புகொண்டனர். நான் அவர்களை கவுன்சிலர் மிஸ் மானுடன் இணைத்து விட்டேன். அதன் பின் பிபிசி இலங்கை அரசின் படுகொலைகள் பற்றிய செய்திகளையும் பிபிசி காட்டியது. இது வெற்றியே.

ரவலர் ஸ்கொயரில் 6000 பேர் சேர்ந்து நின்று Truth and Juctice தமிழ் மக்களுக்கே பிரச்சாரம் செய்வதில் பயனில்லை. நாங்கள் வெளிநாட்டவர்களுக்கு பிரச்சாரம் செய்ய வேண்டும்.

**ல.குரல்: உங்கள் போராட்டங்களில் உங்கள் நண்பர் கவுன்சிலர் தயா இடைக்காடரின் பங்களிப்பு என்ன ?**

கவுன்சிலர் தயா இடைக்காடர் மட்டுமல்ல மிஸ் மான், சசிகலா, யோகநாதன் என கவுன்சிலர்கள் தங்கள் ஒத்துழைப்புகளை வழங்கினர். ஆனால் போல் சத்தியநேசன் இந்த கவுன்சிலர்கள் அமைப்பில் ஈடுபடவில்லை. நாங்கள் மக்களுக்காகவே குரல் கொடுக்கிறோம். அதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம். புலிகள் இந்த போராட்டத்தை செய்யும் படி அழைக்கவில்லை. புலிகள் அழைத்தால் நானும் போகமாட்டேன்.

இங்கு 32 அமைப்புகள் உள்ளன. ஆனால் அவற்றால் எந்த பிரயோசனமும் இல்லை. ஆனால் ஐரோப்பியத் தமிழ் ஒன்றியம் பல போராட்டங்களை ஐரோப்பிய அளவில் மேற்கொண்டு வருகிறது. இதில் டொக்டர் பிரபா, அமிர்தன் ராஜகாரியர், இராஜமனோகரன், அன்பழகன் ஆகியோர் உட்பட 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

(இச்சமயத்தில் ராஜனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. “அவ்வழைப்புக்கு பதிலளித்த ராஜன், அது செய்யலாம் பிரச்சினையில்லை. பாகிஸ்தான் embasyக்கு தானே .....” என்றார்.

**ல.குரல்: உங்களுக்கும் உங்கள் நண்பர்களான சேது, வாசுதேவன் ஆகியோருக்கும் ராம்ராஜ், ஜெயதேவன் ஆகியோருக்குமான தனிநபர் விரோதங்களே இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு உண்டு. அதை ஏற்றுக்கொள்கிறீர்களா ?**

ராஜன்: நிச்சயமாக எனக்கு ஜெயதேவனுடனோ விவேகானந்தனுடனோ எந்த கோபமும் இல்லை. விவேகானந்தன் எனக்கு தனிப்பட்ட முறையில் என்னுடைய மகளின் சாதகக் குறிப்பை எடுத்துத் தந்த ஒரு நண்பர். அவர்களே என்னை விரோதித்தனர்.

**ல.குரல்: சர்ச்சையில் உள்ள ரிபிசி ராம்ராஜ், நீங்கள், நோர்வேயில் உள்ள சேது, வாசுதேவன், கவுன்சிலர் தயா இடைக்காடர் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஒரு காலகட்டத்தில் நண்பர்களாக இருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தீர்கள். இன்று எலியும் பூனையுமாக உள்ளீர்கள். இந்த பிளவுக்கு காரணம் என்ன ?**

ராஜன்: என்னைப் பொறுத்தவரை நான் இப்பவும் நண்பர்களாகவே பார்க்கிறேன். ரிபிசி நடுநிலையூடகமாக இருந்தது. ஆனால் எப்போது ராம்ராஜ் இலங்கைக்குச் சென்று அரசியலில் ஈடுபட்டு ரிபிசியை ஈஎன்டிஎல்எப் என்று அறிவித்தாரோ அதன் பின்னரே இந்தப் பிரிவு வந்தது.

**ல.குரல்: உங்கள் அரசியல் நிலைப்பாடுகள் தனிநபர்களுக்கிடையே பிரச்சினைகளை உண்டாக்குகிறதா ? அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் அரசியலாக்கப்படுகிறதா ?**

எங்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட பிரச்சினையும் இல்லை தனிப்பட்ட அரசியலும் இல்லை. பரிதவிக்கும் மக்களுக்காக குரல் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் என்னை தாக்குகின்றனர். சாதாரணமான என்னை உலக அளவில் குறுகிய காலத்தில் பிரபல்யப்படுத்தியதற்கு நான் ஜெயதேவனுக்கு நன்றி சொல்ல என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கையில் உள்ள எல்லாப் பத்திரிகைகளும் என்னை பிரபல்யப்படுத்தியது. நான் உண்மையில் புலிகளுக்காக வேலை செய்திருந்தாலும், நான் மிஞ்சி விடுவேன் என்பதற்காக புலிகள் என்னை இவ்வளவு தூரம் பிரபல்யப்படுத்தியிருக்க மாட்டார்கள்.

**ராஜன்: உங்களது இணையத்தளமான நிதர்சனத்தில் தனிநபர்கள் மீது சேறு பூசும் செய்திகள், பாலியல் அந்தரங்கச் செய்திகள் என்பன உண்மைக்குப் புறம்பாக வெளியிடப்படுகிறது. இவற்றைத் தவிர்க்க நீங்கள் ஏன் முயற்சிக்கவில்லை ?**

நிதர்சனத்திற்கும் எனக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. யார் செய்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியாது. ஆனால் ஜெயதேவன் டொட் நெற்றில் ஆரம்பத்தில் இருந்தேன். ஆனால் அதில் அவர்கள் தனிப்பட்ட தாக்குதல்களை தொடுத்ததால் அதிலிருந்தும் விலகி விட்டேன்.

எனக்கு தனிநபர்களை பற்றி தாக்கி எழுதுவது விருப்பமில்லை. அவர்களது குடும்பங்கள், பிள்ளைகள் மீது சேறு பூசுவது அநியாயம். என்னை முக்கிய புலி பிரமுகர் என்கிறார்கள். ஏன் ஜெயதேவன் 15 வருடங்கள் புலியில் இருந்தவர். எத்தனை கூட்டங்களை வைத்திருப்பார். என்றைக்காவது அந்தக் கூட்டங்களில் என்னைக் கண்டதை நிரூபிக்கட்டும் பார்ப்போம்.

நான் அல்லது என்னை சார்ந்தவர்கள் எவருடைய குடும்பத்தையாவது தாக்கி விமர்சித்ததை ஆதாரபூர்வமாக நிருபித்தால் நான் இந்த ஈழபதீஸ்வர் கோயிலுக்கு எதிரான போராட்டத்தில் இருந்து விலகுவேன். ஆனால் அவர்கள் எனது குடும்பத்துக்கு எதிராக வானொலியில் சேறு பூசினார்கள். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது.

**ல.குரல்: உங்களது அடுத்த போராட்டம் என்ன ? பாகிஸ்தான் எம்பசி முன் ?**

ராஜன்: டயானா போன்றவர்களின் இறுதி அஞ்சலி இடம்பெற்ற வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்காக அஞ்சலி ஒன்றை ஏற்பாடு செய்து வருகிறோம். அதற்கு பின் பாகிஸ்தான் எம்பசி முன்னாலும் போராட்டம் செய்யும் படி கேட்டு அமைப்பு வந்துள்ளது.

**ல.குரல்: எமது வாசகர்களுக்கு குறிப்பாக ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா ?**

ராஜன்: நாங்கள் தமிழ் மக்களை ஐரோப்பியத் தமிழ் ஒன்றியத்துக்கு தங்களது ஆதரவை வழங்கும்படி கோருகிறோம். எமது போராட்டங்களில் கலந்த கொள்ளும் படி கேட்கிறோம். நீங்களும் உங்கள் பத்திரிகையூடாக எமக்கு ஆதரவு தர வேண்டும். நான் சொன்னதை மாற்றாமல் எழுதுவீர்கள் என நம்புகிறேன். எசகுபிசகாக வந்தால் தெரியும் தானே .......... (என்று நகைச்சுவையுடன் நேர்காணல் முடிவுக்கு வந்தது.)

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# சிறார்களிடையே பற்சூத்தையை கட்டுப்படுத்த brush & paste இலவசம்

சிறார்களிடையே பற்சிதைவு அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. லண்டனில் இது அதிகமாகக் காணப்படுவதாகவும் நியூஹாம் கவன்சில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் London Health Observatory புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது. இதே நிலை ஈலிங், பிரெண்ட், ரவர்ஹம்லட் பகுதிகளிலும் உள்ளது. நியூஹாம் பகுதியில் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பாற்பற்களில் சராசரியாக 5 பற்கள் சூத்தையாகி, சிதைந்து, அடைக்கப்பட்டு இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதனைக் கட்டுப்படுத்த ஆயுள் வரை பற்களைத் தீட்டுங்கள் என்ற திட்டம் கோல்கேட் அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இதன் படி மிகவும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு பற்பசையும் பற்துலக்கியும் (tooth brush) இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஆரம்ப நிகழ்வு நியூஹாமில் உள்ள அப்பிள்பி சுகாதார நிலையத்தில் செப்ரம்பர் 14ல் இடம்பெற்றது.

# good night சொல்லுங்கள் எடையை குறையுங்கள்


பெண்களின் உறக்க நிலைகளை ஆய்வு செய்தபோது 5 மணி நேரத்துக்குக் குறைவாக உறங்கும் போது ஒரு கிழமையில் ஒரு இறாத்தல் எடை அதிகரிக்கின்றது என்று அறியப்பட்டு உள்ளது. 16 வருடங்கள் தொடர்ந்து 7 மணி நேரத்துக்குக் குறைவாக உறங்கிய பெண்களின் எடை 33 இறாத்தலால் அதிகரித்துள்ளது.

விஞ்ஞானிகளின் இந்த ஆய்வு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. 70,000 பெண்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த டொக்டர் சஞ்சே பட்டேல் என்பவர் இவ்வாய்வு மிகவும் பயனுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆகவே உணவை அதிகமாக உண்பதால் ம்ட்டும் எடை அதிகரிக்க மாட்டாது என்பதை கவனிக்க வேண்டும்.

இந்த ஆய்வின்படி கடுமையாக சில நாட்கள் உறக்கத்தை கட்டுப்படுத்திய போது அவர்களுடைய ஓமோன்களின் அளவு அதிகரித்தது. அதில் சில ஓமோன்கள் பசியை அதிகமாக தூண்டியது. ஆகவே அவர்கள் உணவை கூடிய அளவு உட்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே அவர்களின் எடை அதிகரித்தது.

பெண்கள் உறங்குவது குறைவாகவும் உண்பது அதிகமாகவும் இருப்பதால் தான் நிறை கூடுகின்றது என தெளிவாக குறிப்பிட்டுள்ளனர் விஞ்ஞான ஆராய்ச்சியாளர். டொக்டர் பட்டேலும் நித்திரை குறைந்தால் அடிப்படை metabolic rate சக்தியை உடைக்கும் வீதத்தில் மாற்றம் ஏற்படும் என்று காட்டியுள்ளார். இது மனிதனுக்கு மனிதன் வேறுபடும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஐன்ஸ்டின் 100 ஆண்டுகள்



சார்பியல் தத்துவத்தை ஐன்ஸ்டின் உலகுக்கு அறிவித்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. $E=MC^2$ என்ற தனது சமன்பாட்டின் மூலம் மிகச்சிறியதுகளால் கூட மிகப்பெரிய அளவில் சக்தியை வெளியிட முடியும் என்பதை ஐன்ஸ்டின் உலகுக்கு உணர்த்தினார். இச்சமன்பாட்டின் மூலம் மிகப்பெரிய சக்தியை சிறிய் துகள்களில் அடைக்கவும் முடியும் என்பதையும் அவர் விளங்கப்படுத்தி உள்ளார். ஐன்ஸ்டினின் கோட்பாடுகள் மிகவும் புரட்சிகரமானவை. எந்த அளவுக்கென்றால் இதன் காரணமாக நாம் அதுவரை வெளி மற்றும் காலத்துக்கிடையேயான உறவு குறித்து பேணி வந்த பல கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டியதானது.

ஐன்ஸ்டினின் தத்துவம் மேலும் பல புதிய விசயங்களை சொல்கின்றன. ஒளியின் வேகத்தில் பயணிக்கும் ஒருவரின் கடிகாரம் சாதாரணமாக இருக்கும் ஒருவரின் கடிகாரத்தை விட மெதுவாகச் செல்லும் என்று தெரிவிக்கின்றன. இதன் காரணமாக தூரமும் பாதிக்கப்படும். ஒளியின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஒரு காரை ஒருவர் ஓட்டிச் சென்றால் அவர் செல்லும் தூரம் குறைவாக இருப்பதாக சாதாரணமாக இருப்பவருக்குப்படும். ஆனால் கார் ஓட்டிச் செல்பவர் தூரம் அதிகமாக இருப்பதாகவே உணர்வார். முரண்பாடுகள் போல தோன்றினாலும் இது தான் உண்மை.

$E=MC^2$ என்ற சமன்பாடு தான் அணு ஆயுதங்கள் உருவாக்கப்படுவதற்கும் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. ஜேர்மனி அணு ஆயுதங்களை உருவாக்க முயலலாம் என்று அப்போதைய அமெரிக்க அதிபரான ரூஸ்வெல்டிடம் ஐன்ஸ்டின் தெரிவித்துள்ளார். இந்த எச்சரிக்கை அமெரிக்காவை அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய வைத்தது. ஆனால் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டவுடன் இது குறித்து ஐன்ஸ்டின் மிகவும் வருத்தப்பட்டார். மீண்டும் அணு ஆயுதங்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதற்காக அவர் மிகவும் உழைத்தார். சார்பியல் தத்துவம் காரணமாக மிக மிக மோசமான ஒரு ஆயுதம் உருவாக்கப்பட்ட போதிலும் அத்தத்துவமே நவீன இயற்பியலின் ஆரம்பத்துக்கு அடித்தளமாக உள்ளது. அது தான் நமது நவீன சமுதாய வாழ்வை சாத்தியமடையச் செய்துள்ளது.

நன்றி : வீரகேசரி

# பிரித்தானிய இளைய சமுதாயத்தின் குளிர்பான மோகம்



பிரித்தானியாவின் இளைய சமுதாயம் (வயது 6-24) மிக அதிகமான சுவை பானங்களை அருந்துகிறார்கள் என சந்தைப்படுத்தல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் ஓர் ஆண்டிற்கு 825 பானங்களை குடிக்கிறார்கள். ஏனைய ஐரோப்பியர்களுடன் ஒப்பிடும் போது இது அதிகமாகும். அவர்கள் ஆண்டுக்கு 807 பானங்களையே சுவைக்கின்றனர். இக்கணிப்பீட்டின் படி தினமும் 2ஐ விட அதிகமாக இவர்கள் குடிக்கிறார்கள்.

இப்பானங்கள் பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன. 24 வயதிற்கு மேற்பட்டவர்கள் இதில் 37 வீதத்தையே பருகுகிறார்கள் என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அடிக்கடி குளிர்பானம் அருந்துவது உடலுக்கு நல்லதல்ல. அதிகமான பானங்களில் இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை பலவிதமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன. 2005ம் ஆண்டு இக்குளிர்பானங்களின் உற்பத்தியில் 6.3 பில்லியன் பவுண்ஸ் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வருமுன் காப்போம்

நீங்கள் மிகவும் சுகயீனமாக இருக்கின்றீர்களா? அல்லது உங்களுக்கு வயது 65 அல்லது அதற்கும் மேலா? உங்கள் நிர்ப்பீடண தொழிற்பாடு நோய் எதிர்ப்புக்கு உரியதாக நல்ல வலிமையாக இருக்காது. எனவே தடிமன் காய்ச்சல் போன்ற சாதாரண வருத்தங்கள் நியூமோனியா அல்லது வேறு சுவாச நோய்களில் போய் நிற்கலாம். சிறிய வருத்தமாக இருந்தாலும் உடனே வைத்தியரை அணுக வேண்டும். இதற்காக தடுப்பு மருந்துகள் உண்டு. கடந்த ஆண்டு நீங்கள் தடுப்பு மருந்து எடுத்திருந்தாலும் இந்த ஆண்டு தடிமன் போன்ற வருத்தங்கள் வந்தால் குடும்ப வைத்தியரிடம் செல்லுங்கள். குளிர் காலம் வந்துகொண்டு இருக்கின்றது. ஆகவே முன்கூட்டியே தடுப்பு மருந்துகளை எடுத்துக்கொள்ளுங்கள்.



## தாயகம் செல்பவர்கள் கவனத்திற்கு:

# ஆசியாவை நடுங்க வைக்கும் டெங்கு

கடந்த சில தினங்களில் இந்தியாவில் 600 டெங்கு நோயாளர்களை அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இதில் 73 பேர் இறந்துள்ளார்கள். கடந்த மாதம் கேரளாவில் 71 பேர் இறந்துள்ளார்கள்.

டெங்கு ஓர் தொற்றுநோய் ஆகும். இது நுளம்புகளினால் பரவுகின்றது. இது குளிரான, வெதுவெதுப்பான நாட்களில் ஏற்படுகின்றது. பொதுவாக ஆசிய நாடுகளில் உள்ளது.

இலங்கையில் 5 பேர் இறந்துள்ளார்கள். இலங்கையில் இந்நோய் கொழும்பு, கண்டி, கழுத்துறை, கம்பகா போன்ற மாவட்டங்களில் அதிகமா காணப்படுகின்றது. கடந்த வருடம் பிலிப்பைன்சில் 160இற்கும் அதிகமானோர் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். 05.10.06 அன்று டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இந்திய பிரதமரின் குடும்ப அங்கத்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

டெங்குக்காய்ச்சல் சிங்குன்கானியா என்ற ஒரு வைரசினால் ஏற்படுகின்றது. இந்த வைரசுக்களை நுளம்புகள் காவிச்சென்று மனிதரில் தொற்றை ஏற்படுத்துகிறது. இது ஒரு ஆபத்தான உயிர்க்கொல்லி நோய் அல்ல. என்றாலும் தொடர்ச்சியான குருதியிழப்பு, வைத்திய பராமரிப்பு செலவு, குருதி மாற்றீடு போன்றவற்றால் ஆபத்து ஏற்படுகின்றது. இந்நோயினால் குருதிச் சிறுதட்டுக்களின் அளவு குறைகின்றது. எனவே குருதி உறைவது குறைக்கப்படுகின்றது. ஏனெனில் குருதி உறைவதற்கு குருதிச் சிறுதட்டுக்கள் மிக முக்கியமாகும்.

மூக்கில் குருதி வடிதல், தலைவலி, கடுமையான காய்ச்சல், மூட்டுக்களில் தசைகளில் கடுமையான வலி, வாந்தி, குமட்டல் போன்றன இந்நோயின் அறிகுறிகளாகும்.

அறிகுறிகள் தென்பட்டவுடன் உடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கே குருதிப் பரிசோதனை செய்து பார்த்தால் குருதிச்சிறுதட்டுக்கள் குறைவாக காணப்படும். பொதுவாக குருதி மாற்றீடு செய்வார்கள். நோயாளிக்கு நீர் ஆகாரங்கள் கொடுக்கலாம்.

இதைத் தடுக்க சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சாக்கடைகள், நீர்த்தேக்கங்கள், சுகாதார கேடு போன்றவைகளால் தான் இந்நோய் பெருகுகின்றது. இந்நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் குடும்ப வைத்தியரை அணுகி ஆலோசனை பெறவும்.

உண்மைகள் உறங்குவதில்லை.

IOM International Organization for Migration

# IOM can help you return to Sri Lanka

## if

- you are or have been an asylum seeker,
- you have overstayed your visa
- you have no legal status in the UK



If you are an asylum seeker, IOM can assist you further when you are back in Sri Lanka with any of the following:

- small business start up
- vocational training & apprenticeship
- education courses for you and/or our children

**For more information, call IOM free on 0800 783 2332 or visit IOM's website.**

www.iomlondon.org

This programme is co-financed by the European Refugee Fund